# பள்ளிக் கல்வித்துறை

## மானியக் கோரிக்கை எண் - 43

## அறிவிப்புகள்

## 2020-2021


**கே.ஏ.செங்கோட்டையன்**

**பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும்**

**விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

## 1. 1575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்துதல்

பள்ளி மாணவர்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதன் காரணமாக அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளதை கவனத்தில் கொண்டு, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, 1575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.11 கோடி கூடுதல் செலவில் தரம் உயர்த்தப்படும்.

## 2. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் நலனுக்காக பள்ளி பரிமாற்றத் திட்டம் செயல்படுத்துதல்

பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே உள்ள திறமைகள் மற்றும் கற்றல் கற்பித்தலில் பின்பற்றப்படும் நல்ல நடைமுறைகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் வகையில், வரும் கல்வியாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட **8234** அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **6** முதல் **8** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளிப் பரிமாற்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.82.34 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 3. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியரல்லா பணியிடங்கள் இருப்பதை உறுதி செய்ய தேவையான ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவித்தல்

பள்ளிக் கல்வி துறையின் கீழ் இயங்கும் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிர்வாகம், அலுவலகம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான அளவில் ஆசிரியரல்லா பணியிடங்கள் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையின் அடிப்படையில் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் அல்லது பதிவறை எழுத்தர்கள் பணியிடங்கள் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.12.84 கோடி செலவில் தோற்றுவிக்க வழிவகை செய்யப்படும்.

## 4. சிறைவாசிகளுக்கான சமநிலைக் கல்வித் திட்டம் செயல்படுத்துதல்

தமிழகத்தில் **2019–20** ஆம் ஆண்டில், சிறைவாசிகளுக்கான சிறப்பு அடிப்படை எழுத்தறிவுக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்கீழ் தேர்ச்சி பெற்ற சிறைவாசிகளுக்கு, அடுத்தக் கட்டமாக மூன்றாம் வகுப்பிற்கு நிகரான சமநிலைக் கல்வித் திட்டம், மாநில அரசின் சிறப்புப் திட்டமாக **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.20.33 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 5. வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் மாவட்டங்களில் வயது வந்த கற்போர் களுக்கு தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 2019–20 ஆம் ஆண்டில், சிறப்பு பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் செயல்படும் கற்போர் மையங்களில் பயிலும் வயது வந்த கற்போர்களுக்கு அடிப்படை எழுத்தறிவு வழங்குவதுடன் அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்திட ஏதுவாக தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்படும். இத்திட்டம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும்.

## 6. பொதுத் தேர்வுகளுக்கு தரம் மேம்படுத்தப்பட்ட புதிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்

பொதுத்தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களின் தரத்தினை மேம்படுத்தி புதிய வடிவமைப்பில் எளிதில் கிழிக்க இயலாத மற்றும் நீரினால் சேதம் அடையாத வகையில் செயற்கை இழையாலான மேம்படுத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ. **13.50** கோடி செலவில் **2020–21** ஆம் ஆண்டு கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

## 7. செயல்வழி பயன்பாட்டுக் கற்றல் மற்றும் புதுமை மையங்கள் ஏற்படுத்துதல்

பின்தங்கிய ஒன்றியங்களில் முன்னோடித் திட்டமாக தெரிவு செய்யப்பட்ட 5 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 4 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள தொழிற்கல்வி ஆய்வகங்களை நவீனமயாக்கவும் ஆசிரியர்களின் திறனை புத்தாக்கம் செய்யவும், செயல்வழி பயன்பாட்டு கற்றல் மற்றும் புதுமை மையங்கள் ஏற்படுத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.2.00 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

## 8. மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் வளர்ச்சியினை ஊக்குவித்தல்

அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் தேவைகள் மற்றும் கற்றலுக்கான சரியான வழிமுறைகளை வகுத்தல் போன்றவற்றிற்கான கற்பித்தல் வளங்களை உருவாக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருக்கும் வண்ணம், மென்பொருள் தொழில்நுட்ப அடிப்படையிலான "மாணவர்களின் தனிப்பட்ட கற்றல் வளர்ச்சியினை ஊக்குவித்தல்" என்ற திட்டம் பின்தங்கிய ஒன்றியங்களில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.2.00 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 9. தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒலி வடிவில் பாடநுல்களை தயாரித்து வழங்குதல்

அனைத்து வகுப்புகளுக்கும் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்ட புதிய பாடநூல்களை சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒலி வடிவில் உருவாக்கப்பட்டு DHIKSHA மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் இணையதளம் (TNTP) ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.30.00 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

## 10. மாணவர்களின் திறனை வெளிக் கொணர்வதற்கு ஏற்றவாறு வினாத்தாள் தயாரிப்பதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல்

மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளைத் தொடர்ந்து மதிப்பீடு செய்யும் பொருட்டு கற்றல் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் திறனை வெளிக்கொணர்வதற்கு ஏற்றவாறு வினாக்களை வடிவமைப்பதுடன் மாணவர்கள் பாடக்கருத்துக்களைப் புரிந்து கொள்வதில் உள்ள இடர்பாடுகளைக் கண்டறிந்து தீர்வு காண்பது தொடர்பாக அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.39.41 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

## 11. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

11 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் மாணவர் விடுதி, பயிற்சி அரங்கம் மற்றும் ஆய்வகம் போன்ற உட்கட்டமைப்புகளுக்கு தேவையான பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.4.93 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

## 12. மாவட்ட மற்றும் மாநில அளவில் வண்ணத் திருவிழா நடத்துதல்

மாணவர்களிடையே வண்ணம் தீட்டுதல், கருத்துக்களை உருவமாக வரைதல், பயனற்ற பொருட்களைப் பயன்படுத்தி புதிய பொருட்களை உருவாக்குதல் போன்ற திறமைகளை வெளிக் கொணர்ந்து மாணவர்களின் படைப்பாற்றலையும், கலை உணர்வையும், தனித் திறமைகளையும் மிளிரச் செய்யும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் வண்ணத் திருவிழா நடத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.5.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 13. அரசு பள்ளிகளில் 2 மற்றும் 3ஆம் வகுப்புகளில் பயிலும் கற்றலில் பின்தங்கிய மாணவர்களுக்கு குறைதீர் கற்றல் பயிற்சிப் புத்தகம் வழங்குதல்

அனைத்து மாணவர்களும் ஒரே சீராக கல்வி கற்கும் வகையில் அரசுப் பள்ளிகளில் 2 மற்றும் 3ஆம் வகுப்புகளில் பயிலும் கற்றலில் பின்தங்கிய மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு குறைதீர்கற்றல் செய்முறை பயிற்சிப் புத்தகம் உரிய வல்லுனர்களைக் கொண்டு தொகுக்கப்பட்டு வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.100.65 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 14. சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் உடலியக்க வல்லுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்

சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் கல்வி அறிவையும், அவர்களது உடல் மற்றும் மனவலிமையையும் மேம்படுத்தும் வகையில், புதிய பயிற்சி முறைகளையும், நவீன குறைநீக்கும் கருவிகளையும் நல்ல முறையில் பயன்படுத்திட சிறப்புப் பயிற்றுநர்கள் மற்றும் உடலியக்க வல்லுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.19.76 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 15. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வியை மேம்படுத்த நவீன கற்றல் மற்றும் உடலியக்க உபகரணங்கள் வழங்குதல்

உள்ளடக்கிய கல்வித் திட்டத்தின் கீழ் 51 பள்ளி ஆயத்தப் பயிற்சி மையங்களில் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியை மேம்படுத்திடும் விதமாக புதிய கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் உடலியக்க பயிற்சியளிக்கும் நவீன உபகரணங்கள் வழங்கப்படும். மேலும், 20 பள்ளிகளில் ஆயத்தப் பயிற்சி மையங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.82.20 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 16. டி.பி.ஐ வளாகத்தில் நூலகம் அமைத்தல்

பள்ளிக் கல்வித் துறை சார்ந்த இயக்ககங்கள் செயல்படும் டி.பி.ஐ வளாகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவ்வளாகத்திற்கு வருகைபுரியும் பொதுமக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக டி.பி.ஐ வளாகத்தில் நூலகம் ஒன்று அமைக்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.9.00 இலட்சம் இதற்கென செலவிடப்படும்.

## 17. 120 மாதிரிப் பள்ளிகளில் தகவல் களஞ்சியங்கள் அமைத்தல்

**2018–19** மற்றும் **2019–20** ஆம் கல்வி ஆண்டில் **120** மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே இளம் பருவத்திலேயே நூல்கள் மற்றும் வார இதழ்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கி அறிவுத்திறனை கூர்மையாக்கி, படைப்பாற்றலை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு மாதிரிப் பள்ளியிலும் நூல்கள், வார இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் கொண்ட தகவல் களஞ்சியம் ஏற்படுத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, இத்திட்டம் ஆண்டுக்கு ரூ.30 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 18. அனைத்து நூலகங்களிலும் குடும்ப நூலக உறுப்பினர் அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்துதல்

பொதுமக்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க, ஒரே குடும்பத்தில் உள்ள அதிகபட்சம் ஐந்து உறுப்பினர்கள் பயன்படுத்தும் வகையில் குடும்ப நூலக உறுப்பினர் அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம், ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் ரூ.100 செலுத்தி உறுப்பினராகி ஒரே சமயத்தில் ஐந்து நூல்களைப் பெறலாம். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 19. வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு கேடயம் வழங்குதல்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதமாக, ஓர் ஆண்டில் நூலகத்தை அதிக நேரம் பயன்படுத்திய மாணவர்களுக்கு, ஒரு மாவட்டத்தில் மூன்று மாணவர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.1000 மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, இத்திட்டம் ரூ.1.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 20. மாணவர்களின் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் ஆசிரியருக்கு கேடயம் வழங்குதல்

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து மாணவர்களுக்கும், நூலகத்திற்கும் இடையே ஒரு அறிவுப் பாலாமாகச் செயல்படும் ஆசிரியர் பெருமக்களை கௌரவிக்கும் வகையில், மாவட்ட அளவில் **3** ஆசிரியர்களுக்கு ரூ. **2000** மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, இத்திட்டம் ரூ.2.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 21. குடியிருப்பு வளாகங்களில் சமுதாய நூலகம் அமைத்தல்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் பெருகியுள்ள நிலையில், வீடெங்கும் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் விதமாக, குடியிருப்பு வளாகங்களில் குடியிருப்போர், பொது நூலகத் துறைக்கு குறைந்தபட்ச வைப்புத் தொகையாக ரூ.20,000 மற்றும் நூலகம் செயல்படுவதற்கான அறை மற்றும் தளவாடப் பொருட்களை வழங்கும் பட்சத்தில், அருகாமையிலுள்ள பொது நூலகங்கள் மூலம் நூல்கள் மற்றும் இதழ்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 22. சென்னை அண்ணாநகர் (கிழக்கு) நூலகத்திற்கு இணைப்புக் கட்டடம் அமைத்தல்

சென்னை மாநகரின் பிரதான பகுதியான அண்ணா நகர் (கிழக்கு) பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக அமைந்துள்ள பொது நூலகத்தின் வாசகர்களின் நலன் கருதி, அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய இணைப்புக் கட்டடம் புதியதாக கட்டப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.75.00 இலட்சம் செலவில் இப்பணி நிறைவேற்றப்படும்.

## 23. 11 மாவட்டங்களில் உள்ள நூலகக் கட்டடங்களைப் புனரமைத்தல்

பொது நூலகங்களைப் பயன்படுத்தி வரும் வாசகர்களின் நலன் கருதியும், நூலக கட்டமைப்புகளை வலுப்படுத்தும் பொருட்டும், வாசகர் பயன்பாடு அதிகமாக உள்ள 11 மாவட்டங்களில் சொந்த கட்டடங்களில் செயல்படும் 17 நூலகக் கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.1.00 கோடி செலவில் இப்பணிகள் நிறைவேற்றப்படும்.

## 24. மத்திய மற்றும் மாநில அரசின் விருது பெற்ற தமிழ் நூல்களை நூலகங்களுக்கு வாங்குதல்

ஒவ்வொரு ஆண்டும் மத்திய மற்றும் மாநில அரசின் விருது பெறும் தமிழ் நூல்கள் மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்களில் வாசகர்களின் பயன்பாட்டிற்கு வாங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ஆண்டு ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.60.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 25. இயற்கை எய்திய நூலகப் பணியாளர்களின் நூல் இழப்பிற்கான அபராதத் தொகையினை ரத்து செய்தல்

பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நூலகப் பணியாளர்களின் மொத்த நூல் இழப்புத் தொகையில் ரூ.5000 மட்டுமே இதுவரை ரத்து செய்யப்பட்டு வரும் நிலையில், வரும் ஆண்டு முதல் அப்பணியாளர்களின் நூல் இழப்பிற்கான அபராதத் தொகை முழுவதுமாக ரத்து செய்யப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 26. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிககளில் தையல், இசை மற்றும் ஓவியம் ஆகிய பாடங்களைப் பயிற்றுவிக்க தேவையான உபகரணங்கள் வழங்குதல்

தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி இணை செயல்பாடுகளை ஊக்குவிக்கும் விதமாக தையல், இசை மற்றும் ஓவியம் ஆகிய பாடங்களைப் பயிற்றுவிக்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ. **8.29** கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 27. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் என்பதை தனியார் பள்ளிகள் இயக்ககம் என பெயர் மாற்றம் செய்தல்

தமிழ்நாட்டில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து வகைத் தனியார் சுயநிதிப் பள்ளிகளை நிர்வகிப்பதற்கும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டம், 2018 இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி அனைத்து வகைத் தனியார் சுயநிதிப் பள்ளிகளும் ஒரே இயக்ககத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் என்பது தனியார் பள்ளிகள் இயக்ககம் என **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** பெயர் மாற்றம் செய்யப்படும்.

## 28. மதிப்பெண் சான்றிதழ்களில் பெற்றோர்களின் பெயர்களை அச்சிட்டு வழங்குதல்

பத்தாம் வகுப்பு மாணவர்களின் பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர் பெயருடன் பெற்றோர் பெயரும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 29. கலை, இலக்கியப் போட்டிகள் மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்துதல்

மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளையும், தனித்துவமான கலைத் திறன்களையும் வளர்க்கும் வண்ணம் மாநில மற்றும் குறுவள மைய அளவில் அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட கலை, இலக்கிய போட்டிகள் நடத்தப்படும். மேலும் அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களிடையே ஆரோக்கியமான உணவு பழக்கத்தினை ஊக்குவித்திட குறுவள மைய அளவில் பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.5.00 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 30. மனத்திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்விற்கான மாதிரி வினா–விடை கையேடு வழங்குதல்

திறனறித் தேர்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மனத்திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்விற்கான மாதிரி வினா–விடை கையேடு வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.20.08 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 31. மேல்நிலைப் பள்ளிகளில் பாடத் தொகுப்புகள் மேம்படுத்துதல்

**2020 – 21** ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் உள்ளப் பாடப் பிரிவுகளில் மாணவர்கள் உயர்கல்வியை தேர்வு செய்வதற்கும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் ஏற்ப மூன்று முதன்மைப்பாடங்கள் அல்லது நான்கு முதன்மைப்பாடங்கள் கொண்ட பாடத் தொகுப்புகளை தேர்ந்தெடுத்துக்கொள்ள வழிவகை செய்யும் திட்டம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** செயல்படுத்தப்படும்.

## 32. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு திருக்குறள் புத்தகம் வழங்குதல்

உலக பொதுமறை என்னும் சிறப்பு மிக்க நூலான திருக்குறளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எளிய உரைவடிவில் உருவாக்கி அதனை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக அச்சிட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இத்திட்டம் ரூ.27.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 33. ஆசிரியர் தேர்வு வாரியத் தேர்வுகளை நடத்திடும் நிர்வாக அலுவலர்களுக்கு பயற்சி வழங்குதல்

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் வெளிப்படைத்தன்மையிலான கணினி வழி தேர்வுகளின் செயல்பாடுகளை வலுபடுத்த பள்ளிக் கல்வித் துறை நிர்வாக அலுவலர்களான முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், தலைமையாசிரியர் நிலையில் உள்ள கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலர்களுக்கு மண்டல வாரியாக பயற்சி வழங்கப்படும். மேலும் பிற மாநிலங்களில் போட்டித் தேர்வு நடத்தும் தலைசிறந்த நிறுவனங்களை பார்வையிட்டு பயிற்சி பெறவும் வழிவகை செய்யப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இப்பயிற்சி ரூ.75.00 லட்சம் செலவில் வழங்கப்படும்.

## 34. ஆசிரியர் பணித் தெரிவிற்கு விண்ணப்பிக்கும் பணிநாடுநர்கள் பயன் பெறும் வகையில் தகவல் மையங்கள் (KIOSK) ஏற்படுத்துதல்

ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் வெளியிடப்படும் பணித் தெரிவுகளுக்கான அறிவிக்கைகள் மற்றும் தொடர்புடைய இதர விவரங்களை, ஆசிரியர் பணி நாடுநர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், பணிநாடுநர்கள் விண்ணப்பிக்க உதவும் நோக்கத்துடனும், ஒவ்வொரு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்ட கல்வி அலுவலகம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலகங்களில் தகவல் மையங்கள் (KIOSK) ஏற்படுத்தப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.10.00 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 35. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லும் போது அரசு அருங்காட்சியகங்களைப் பார்வையிட ஊக்குவித்தல்

மனித நாகரிகத்தின் முழுமையான வரலாறு, தமிழர்களின் தொன்மை, இந்தியப் பண்பாடு, கலாச்சாரம் போன்ற ஆழமான சிந்தனைகளை, காட்சிகள் மற்றும் கலைப்பொருட்கள் வாயிலாக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லும் போது அரசு அருங்காட்சியகங்களைப் பார்வையிட பெரிதும் ஊக்குவிக்கப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 36. ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் நடத்தப்படும் கணினி வழி தேர்வுகளை வலுப்படுத்திட தலைசிறந்த கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்

ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் நடத்தப்படும் கணினி வழித் தேர்வுகளை வலுப்படுத்திடவும் அதன் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடவும் IIT, MIT போன்ற நிறுவனங்களுடன் தொழில்நுட்பம் சார்ந்த ஆலோசனைகளைப் பெற புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**கே.ஏ.செங்கோட்டையன்**

பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்